**அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2006**

# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்

**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

எழுத்தறிவுப் போட்டி

## அதிவிஷேட பரீட்சை

(8-18 வயது வரை)

காலம்: பி.ப. 4.15 மணி,
சனிக்கிழமை, **12/08/2006**

நேரம்: 1.30மணி

(பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிக 10 நிமிடங்கள் வழங்கப்படும்)

அடையாள இலக்கம்: ☐ ☐ ☐ ☐ ☐ ☐

**அ) பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடவும்.**

புள்ளிகள்: 40x1.25= 50

1 பின்வருவனவற்றுள் உயிர் எழுத்து எது?
1 க  2 டு
3 இ  4 ம

2 குயில் கூவுவது போல், மயில்
1 பாடும்  2 ஓலமிடும்
3 பிளிரும்  4 அகவும்

3 திருக்குறளை இயற்றியவர் யார்?
1 கம்பர்  2 இளங்கோ
3 திருவள்ளுவர்  4 திருநாவுக்கரசர்

4 இந்துக்களுக்கு கோயில் போல், கிறிஸ்தவர்கள் வழிபடும் இடம் எது?
1 தேவாலயம்  2 சிவாலயம்
3 பள்ளிக்கூடம்  4 பள்ளிவாசல்

5 தமிழில் இரட்டைக் கிளவி என அழைக்கப்படுவது எது?
1 கரடு முரடு  2 அக்கம் பக்கம்
3 சல சல  4 ஏற்றம் இறக்கம்

6 சூரியனைக் கண்டு மலரும் மலரின் பெயர் என்ன?
1 ஆம்பல்  2 செவ்வரத்தம் பூ
3 தாமரை  4 சூரியகாந்தி

7 நோயற்ற வாழ்வே குறைவற்ற .. .. .. ..?
1 கோலம்  2 சுகம்
3 செல்வம்  4 ஞானம்

8 ஐம்பூதங்களில் ஒன்றல்லாதது எது?
1 நிலம்  2 நீர்
3 கடல்  4 ஆகாயம்

9 அறஞ்செய்ய விரும்பு என்னும் அறிவுரையை வழங்கியவர் யார்?
1 அறஞ்செய்யனார்  2 திருவள்ளுவர்
3 ஔவையார்  4 யேசுநாதர்

10. பாண்டி நாட்டின் சங்ககாலத் தலைநகரங்களில் ஒன்று
1 காஞ்சி  2 கபாடபரம்
3 இராமநாதபுரம்  4 மாமல்லபுரம்

11 `ஆறுவது சினம்' என்பது எந்த நூலில் கூறப்பட்டுள்ளது?
1 தேவாரம் 2 ஆத்திசூடி
3 கம்பராமாயணம் 4 பைபிள்

12 பரீட்சைக்காக அந்த மாணவன் .. .. .. .. .. .. .. .. படித்தான்.
1 கண்ணும் கருத்துமாக 2 வழிமேல் விழி வைத்து
3 கையும் களவுமாய் 4 கண்ணீரும் கம்பலையுமாக

13 ஒரு விடயம் மிகத் தெளிவாகத் தெரியுமாயின் அதை இப்படிச் சொல்வார்கள்.
1 உள்ளங்கை நெல்லிக் கனிபோல 2 ஓருடல் ஈருயிர் போல
3 நகமும் சதையும் போல 4 கீரியும் பாம்பும் போல

14 நள மாகராசன் தமயந்தியிடம் தூதனுப்பிய பறவை எது?
1 காகம் 2 கிளி
3 கொக்கு 4 அன்னம்

15 மன்னன் புரவியில் ஏறி பயணம் செய்தான் என்றால், அவன் .. .. .. .. . .. . ஏறிப் பயணம் செய்தான் என்பதாகும்.
1 தேர் 2 பல்லக்கு
3 மாட்டு வண்டி 4 குதிரை

16 மதி என்றால் சந்திரனைக் குறிக்கும். அதற்கு இன்னொரு கருத்தும் உள்ளது. அது எது?
1 அறிவு 2 கோவில்
3 அழகு 4 திறமை

17 காவிரியாற்றுக்கு கல்லணை அடைத்த சோழமன்னன்
1 கரிகாலன் 2 இரும்பொறை
3 இராஜராஜன் 4 இராஜேந்திரன்

18 முல்லைக் கொடிக்கு இரங்கி தன் தேரை வழங்கிய மன்னன் யார்?
1 இராமன் 2 நெடுஞ்செழியன்
3 பாரி 4 கர்ணன்

19 கடலும் கடல் சார்ந்த இடத்தை தமிழர்கள் எப்படி அழைத்தார்கள்?
1 முல்லை 2 மருதம்
3 நெய்தல் 4 கடல்வெளி

20. மல்லிகை என்னும் சிற்றிலக்கிய ஏட்டின் ஆசிரியராக 30 ஆண்டுகளாக சேவையாற்றி வருபவர்?
1. சுஜாதா 3. டொமினிக் ஜீவா
2. நா. சுப்பிரமணியன் 4. அனுஷா சேகரம்

21. திகழ் + தசம் என்பதைப் புணர்த்தினால் வருவது
 1 திகதசம் 2 திகடசம்
 3 திகழ்தசம் 4 திகறசம்

22 தன்னைப் பற்றி ஒருவர் எழுதுகின்ற நூலை எவ்வாறு அழைப்பார்கள்?
 1 சுயசரிதம் 2 தற்பெருமைக் களஞ்சியம்
 3 நானிதழ் 4 தற்கதை

23 சுயம்பு என்பதன் பொருள் என்ன?
 1 வரம்பு 2 தானாகத் தோன்றியது
 3 இரும்பினால் செய்தது 4 செம்பு

24 அதியமான் ஔவையாருக்கு கொடுத்த கனி எது?
 1 மாங்கனி 2 நாவல் பழம்
 3 பலாக்கனி 4 நெல்லிக்கனி

25 `யாதும் ஊரே யாவரும் கேளிர்' என கூறியவர் யார்?
 1 கணியன் பூங்குன்றனார் 2 நாவலியூர் சோமசுந்தரப்புலவர்
 3 விவேகானந்தர் 4 காரைக்கால் அம்மையார்

26 நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? என்ற கவிதையை எமக்களித்தவர் யார்?
 1 சுப்பிரமணிய பாரதியார் 2 கண்ணதாசன்
 3 மாணிக்கவாசகர் 4 இளங்கோவடிகள்

27 கி.மு 2000 ஆண்டு என அழைக்கப்படுவதன் பொருள் என்ன?
 1 கிடைக்கும் முன்பாக 2 கிறிஸ்துவுக்கு முன்பாக
 3 கிழக்கு முனை நோக்கி 4 கிரகங்கள் முன்பாக

28 உலகிலுள்ள தமிழர்களின் தொகை எண்ணளவாக எவ்வளவு?
 1 8 மில்லியன் 2 80 மில்லியன்
 3 800 மில்லியன் 4 8 இலட்சம்

29 தண்ணீர் தேசம் என்னும் கவிதை நூலை வழங்கியவர் யார்?
 1 வாலி 2 வைரமுத்து
 3 மு.மேத்தா 4 கவிஞர் அம்பி

30 தமிழை உயர் தனிச் செம்மொழியாக அங்கீகரிக்கப் பாடுபட்ட அமெரிக்கர் யார்?
 1 ஹரிஸ் 2 மக்மிலன்
 3 பைன்மன் 4 கிஸ்ஸிங்கர்

31 சுப்பிரமணிய பாரதியாரின் சொந்த ஊர் எது?

1 விருதுநகர் 2 திருச்சி
3 மதுரை 4 எட்டையபுரம்

32 தமிழில் வல்லின மெய்யெழுத்துகள் ஆவன?

1 க் ச் ட் த் ப் ற் 2 ய் ர் ல் வ் ழ் ள்
3 ங் ஞ் ண் ன் ம் ந் 4 ய் ர் ண் ந் ம் ன்

33 தமிழிலுள்ள ஆய்த எழுத்துக்களின் எண்ணிக்கை?

1 ஒன்று 2 பதினெட்டு
3 247 4 50

34 சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

1 முருகையன் 2 சச்சிதானந்தன்
3 உமறுப் புலவர் 4 சீத்தலைச் சாத்தனார்

35 மருமக்கத் தாயம் என்னும் தாய் வழி உரிமை இலங்கையில் நடைமுறையில் உள்ள பிரதேசம் எது?

1 யாழ்ப்பாணம் 2 மட்டக்களப்பு
3 முல்லைத்தீவு 4 காலி

36 மலையகத்தமிழர்களை இலங்கையில் கொண்டுவந்து குடியேற்றியவர்கள் யார்?

1 அராபியர் 2 போர்த்துக்கேயர்
3 ஒல்லாந்தர் 4 ஆங்கிலேயர்

37 தமிழ்மொழியின் தொன்மையான இலக்கண நூல் எது?

1 தொல்காப்பியம் 2 இராமாயணம்
3 நல்வழி 4 திருக்குறள்

38 விற்கொடியை உடைய தமிழ் அரசர்கள்?

1 சேரர் 2 பாண்டியர்
3 சோழர் 4 பல்லவர்

39 கவிதையாக எழுதப்பட்டுவந்த தமிழை வசனநடைக்கு கொண்டுவந்த பெருமைக்குரியவர் யார்?

1 அனுராதா ரமணன் 2 ஆறுமுக நாவலர்
3 இந்துமதி 4 லக்ஷ்மி

40 கரித்துண்டு என்ற சமூக நாவலை எழுதியவர் யார்?

1 செங்கை ஆழியான் 2 கோகிலா மகேந்திரன்
3 மு.வரதராசனார் 4 நிந்தவூர் இக்பால்

**புள்ளிகள்: ..........................**

**ஆ) பின்வரும் கேள்விகளுக்கு சரியான விடைகளைக் கோடிட்ட இடங்களில் எழுதலும்.**

புள்ளிகள்: 10x2= 20

1. செங்குத்தான மலைப்பகுதியிலேயே கழுகுகள் அதிகம் ...........................

2. தங்களுடைய .......................... வெறுப்புகளை பார்க்காது மக்களுக்குத் தொண்டாற்றிய மேதைகள் பலர் உள்ளனர்.

3. கேரள நாட்டில் கோலம் .......................... மலர்களைப் பயன்படுத்துகிறார்கள்.

4. மனிதன் தன் உணர்ச்சிகளையும் தன்னைப் பாதித்த விடயங்களையும் ஓவியக் கலை மூலம் ..........................

5. தேனிக்கள் மலர்களிலிருந்து தேனை ..........................எடுத்து தேன் கூட்டில் சேகரிக்கின்றன.

6. உடலில் களைப்பு ஏற்படும்போது சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வது .......................... .

7. தீயணைப்பு படைவீரர்கள் தீயுடன் பல மணிநேரம் .......................... பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

8. பலமாதங்கள் தொடர்ந்து மழை பெய்ததால் நீர்த்தேக்கங்கள் ...........................

9. அழுது அடம்பிடித்த தம் குழந்தையிடம் பொம்மையைப் பின்னர் வாங்கித் தருவதாகக் கூறி தாய் குழந்தையை ..........................

10. .......................... வாழ்கின்ற பறவைகளிலேயே மிகப் பெரியது நெருப்புக் (தீக்) கோழி ஆகும்.

புள்ளிகள்: ......................

**இ. கீழே தரப்பட்ட இரண்டு தலைப்புக்களில் ஒன்றைப் பற்றி 150 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**
**கொடுக்கப்பட்ட எழுதுதாளை இதற்கு உபயோகிக்கவும்.**
புள்ளிகள் = 30

1. நான் வசிக்கும் பகுதியில் நான் காணவிரும்பும் மேம்பாடுகள் (அல்லது முன்னேற்றங்கள்)
2. பாதிக்கப்பட்ட எமது தமிழ்ச் சகோதரர்களுக்கு நான் செய்யக்கூடிய உதவிகள்

மொத்தப் புள்ளிகள்: ....................................